மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: *அதை இரண்டு மாதத்திற்குள் உருவாக்கி, 2 வருடங்களுக்குள் அனைத்து வாகனங்களுக்கும் அந்தப் புதிய High Security Plate பொருத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை அமல்படுத்துவதன்மூலமாக, இன்றைக்கு போலி வாகனங்கள் தடுக்கப்படும். அதோடு மட்டுமல்லாமல், வரி ஏய்ப்பு தடுக்கப்படும். அந்தத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மிக விரைவில் அமல்படுத்துவதற்காக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகிவிட்டதன் காரணமாக, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கைக்கான பதிலுரையை மட்டும் முடித்திருக்கிறேன். இன்னும் மின்சாரத் துறையைப் பற்றிய பதிலுரை இருக்கின்ற காரணத்தினால், நாளை அதற்கு அனுமதி தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைச்சரின் பதிலுரை நாளை தொடரும்.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30–3–2005) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

85. 2003–2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

86. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

2005 மார்ச் 29]

87. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் கணக்குகள்மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

135. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைமீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

136. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2005–2006. (தமிழ்)

137. கோரிக்கை எண் 13–எரிசக்தித் துறை–தமிழ்நாடு மின்சார வாரியம்–மின்சார ஆய்வுத் துறை–தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

138. மானியக் கோரிக்கை எண் 24–உள் துறை–இயக்கூர்திகள் சட்டங்கள்–நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

139. மானியக் கோரிக்கை எண் 46–போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

140. மானியக் கோரிக்கை எண் 46–போக்குவரத்துத் துறை–போக்குவரத்துக் கழகங்களின் செயல் திறன் ஆய்வு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

141. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கை. (2003–2005)

142. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஐந்தாவது அறிக்கை. (2003–2005)

143. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஆறாவது அறிக்கை. (2003–2005)